செ. கு. எண்: 64

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 2.3.2013

சென்னை பெருநகர காவல், ஆவடி காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. L.லவகுமார் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 25.2.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் நகர காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சேகர் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 25.2.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம் ஆயுதப்படை பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.பிரபாகரன் அவர்கள் 28.2.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர்கள் திரு. லவக்குமார் திரு. சேகர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் திரு. பிரபாகரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர்கள் திரு. லவகுமார், திரு. சேகர் மற்றும் மாரடைப்பால் காலமான இரண்டாம் நிலைக் காவலர் திரு. பிரபாகரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**